விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிலைப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு கொழும்பு

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆடி புரட்டாசி 20உ தங்கட்கிழமை | Colombo, October, 6. 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 20 | இதழ் 125

நவ இந்தியாவைப்பற்றி சோவியத் ரஷியா கருத்து

உட்காருமிடத்திற்கு மந்திரிகள் திண்டாட்டம்

தமிழ், முஸ்லிம் மந்திரிகள் இருவருக்கு ஒரே மேஜை

குந்த இடமின்றி அந்தரப்பட்ட திரு. குணசிங்காவுக்கு கோபம்வந்துவிட்டதாம்!

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 6

டொனமூர் திட்டத்தின்படி ஏழு மந்திரிகளுக்குத் தான் காரியாலயங்கள் இருந்தன. இப்போழுதுள்ள சோல்பரி திட்டத்தினபடி பதினான்கு மந்திரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மந்திரி காரியாலங்கள் சில இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு காரியாலயத்தில் ஒரு மந்திரியின் மேசையை இரண்டு மந்திரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழைய கைத்தொழில் வர்த்தக மந்திரியின் காரியாலயத்தை இரண்டாகப் பிரிந்து தொழில் மந்திரி திரு. டி. பி. ஜாயாவும், அவரின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. ஏ ஈ குணசிங்காவும், வர்த்தக மந்திரி திரு. ஸி. சுந்தரலிங்கமும் உபயோகிக்கின்றனர்.

திரு. ஜாயாவும், திரு குணசிங்காவும் காலையில் காரியாலயத்திற்குச் செல்லுகின்றனர் என்றும் திரு சுந்தரலிங்கம் மாலையில் அங்கு காணப்படுகின்றார் என்றும் அறியப்படுகிறது.

சென்ற வெள்ளிக்கிழமை திரு. குணசிங்கா தமது காரியாலயத்திற்குச் சென்ற பொழுது அவருக்கெனவுள்ள பாதி மேசை காணப்படவில்லை. வர்த்தக மந்திரி திரு சுந்தரலிங்கம் அன்று காலையில் அவரைப் பேட்டி காணச் சென்ற பிடவை வர்த்தகர்களின் தற்காலிக தேவைக்காக திரு குணசிங்காவின் மேசை எடுக்கப்பட்டிருந்தது.

திரு குணசிங்காவுக்குப் பெருங்கோபம் வந்ததாம். காரியாலயத்தை விட்டு உடனே வெளியேறினாராம் வெளியேறியது மலையாள தொழில் மந்திரி சுந்தரலிங்கத்துக்கு எழுத்து மூலம் இப்படி செய்வது முறையல்லவென்றும் சொல்லியுள்ளார் என்றும் அறியப்படுகிறது.

பாராளுமன்றக் காரியதரிசிகள் பதினான்கு பேரில் திரு. குணசிங்கா ஒருவரே தமது காரியாலயத்தில் இப்பொழுது காணப்படுபவராவர்.

இலங்கையின் புதிய பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயக்கா அடுத்தவாரம் பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து கிடைத்ததும், இலங்கையர்களைக் கொண்ட ஒரு பலம்பொருந்திய இராணுவத்தை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

இம் மாதம் 14 ம் தேதி கூடவிருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் "ஸ்பீக்கர்" பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும்வரைக்கும், பிரதிநிதிகள் சபையின் காரியதர்சி திரு. ரூல்வ் எஸ்டி எல் பி டெறனியாகலை தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

75 மைல் தூரம் வெளிச்சம்

விமானங்களுக்கு தீபஸ்தம்பம்

பாரிஸ், அக். 4

ஆகாயவிமானங்களுக்கு இரவில் வழிகாட்டும் பொருட்டு இங்கு ஈபல் கோபுரத்தின் உச்சியில் 933 அடி உயரத்தில் ஓர் தீபஸ்தம்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் வைத்துள்ள மர்ச்லைட் 50 கடி உயரம் உள்ளது. இதன் வெளிச்சம் இப்பொழுது 50 மைல் தூரம் தெரிகிறது. இது இன்னும் மூன்று மாதத்தில் 75 மைல் தூரம் தெரியக் கூடியபடி அமைக்கப்படும்.

அயர்லாந்தில் இளவரசு அலிகான் சொத்து

டப்ளின், அக் 4

அயர்லாந்தில் ஆகாகான் புகழ்பெற்ற இளவரசு அலிகானுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. இப்பொழுது இருபதினாயிரம்பவுணுக்கு கலப்பாரே எனுமிடத்தில், ஓர் பண்ணை வாங்கியிருக்கிறார். இதில் பந்தயக் குதிரைகள் வளர்க்கப்படும். (ராய்ட்டர்)

கூட்டம் ஆரம்பமாவதற்குச் சில அங்கத்தவர்களும் மண்டபத்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூடியதும், பிரதிநிதிகள் சபைக்காரியதர்சி தமது கதிரையில் உட்காருவார். பின் அவர் ஆங்கிருந்து கவர்னரின் அறிக்கையை வாசித்ததும் "ஸ்பீக்கரை"த் தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுவார்.

பாகிஸ்தானுடன் விமான ஒப்பந்தம்

கராச்சியில் லார்டு நேதன

கராச்சி, அக் 4

ஆஸ்திரேலியா, நியூஜலந்து சைனா, ஜபான், சயாம் இலங்கை முதலிய இடங்களில் இரண்டு மாதங்களாக சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு லண்டன் திரும்பும் மார்க்கத்தில் நேற்று லார்டு நேதன் இங்கு வந்தார். சயாமுடன் மேற்படியான ஆகாயவிமானப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்யப்பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டி கூடிய சீக்கிரம் அங்கு செல்லுமென்று அவர் இன்று தெரிவித்தார். இன்று அவர் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜின்னாவையும் போக்குவரத்து மந்திரி நிஷ்தாரையும் சந்தித்துப் பாகிஸ்தானுடன் பிரிட்டன் விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்வது பற்றிப் பேசினார். பாகிஸ்தான் விமானப்போக்குவரத்து அபிவிருத்திக்கு பிரிட்டன் உதவி செய்யுமென அவர் வாக்களித்தார்.

இந்திய சர்க்காருடன் பாகிஸ்தான் ஆகாய விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்து கொண்டதன் பயனாக ஓரியண்ட் ஏர்வேஸ் கம்பெனியார், 2-ம் தேதி முதல் சராச்சிக்கும் டாக்காவுக்குமிடையே டிலி மார்க்கமாக வாரம் மூன்று தடவை விமானப் போக்குவரத்து நடத்தி வருகிறார்கள். கராச்சி, லாகூர், ராவல்பிண்டி, பெஷாவார் இவைகளின் இணைத்துவமானப் போக்குவரத்து நடத்த ஏற்பாடாகி வருகிறது.

எகிப்தில் காலாபவியிருப்பதால் கல்கத்தா செல்லும் பிரஞ்சு விமானங்களில் செல்லும் பிரயாணிகள் காச்சிக்கு வரும் போது காலை ஊசி குத்திக்கொள்ள வேண்டுமென்று பாகிஸ்தான் சர்க்கார் பிரான்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இந்திய முஸ்லிம் தலைவர்கள்

கொழும்பு, அக். 5

தென் இந்திய முஸ்லிம் கல்விச் சங்கத்தின் கௌரவ காரியதரிசி திரு பஷீர் அஹ்மத் சயீத், சென்னை மாநகர மேயர் டாக்டர் சையத் நிஸ்மத்துல்லா, வழக்கறிஞர் ஸீ ஏ முஹம்மத் இப்ராஹீம் முதலியவர்கள் இந்தியாவிலிருந்து விமான மூலம் நேற்று கொழும்பிற்கு வந்துள்ளார்கள்

அக்டோபர் மாதம் 9-ம் தேதி வரைக்கும் இங்கு தங்கியிருப்பார்கள்

ஐக்கிய தேச புனருந்தாரண சபை

சீனப் பகுதி மூடப்படும்

ஷாங்கை, அக். 4

ஐக்கிய தேச புனருத்தாரண சபையின் டைரக்டர் ஜெனரல் மேஜர் ரூக்ஸ் வாஷிங்டனிலிருந்து அடுத்த வெள்ளிக்கிழமை இங்கு வருகிறார் சீன கம்யூனிஸ்டுகளுள்ள பிரதேசங்களில் உதவி செய்ய நிறுவப்பட்டிருந்த சீனப் பகுதியை மூடி விடுவது பற்றியும், சபையினை

இலங்கை கொப்பரு வர்த்தகர் அப்பீல் தள்ளுபடி

கட்டுப்பாட்டை மீறியதால் சிறைத் தண்டனை

பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு

பம்பாய், அக். 4

கொப்பரு வர்த்தகரான கல்சன் ராலபாஞ்ஜி கம்பெனி முதலாளியான பாஞ்சிமாஜி தந்தியாபாரி புரிசட்ட உத்தரவை மீறி சிவில் சப்ளை அதிகாரி அனுமதியின்றி 53 டன் இலங்கை கொப்பருவை விநியோகம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு மாகாண மாஜிஸ்திரேட்டால் 4 மாதம் கடுங்காவல் தண்டனையும் பதினாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தார்.

பாஞ்சி மாஜி ஹைக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். ஹைக்கோர்ட்டார் கீழ்க்கோர்ட்டு தண்டனையை அனுமதித்து அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டனர்.

அனுராதபுரம் நகர சபையில் "கோரமில்லாக்" கோரம்

எல்லா அங்கத்தவர்களுக்கும் வெறுப்பா?

அனுராதபுரம், அக். 5

அனுராதபுரம் நகர சபைத் தலைவர் திரு. எப். பி. சேனரத்ன அவர்கள் மீது "நம்பிக்கையில்லாத் தீர்மானம்" விவாதப் பத்திரமென ஸ்தல ஸ்தாபன உதவி கமிஷனர் திரு. எல் பி. இராஜகருணா என்பவரால் கூட்டப்பெற்ற சபை அங்கத்தவர்கள் கூட்டம், அங்கத்தவர்களில் ஒருவருமே வராதபடியால் கூட்டத்தை நடத்தக்கொள்ள முடியவில்லை.

சில அங்கத்தவர்கள் சபைக் கூட்டிடத்துல காணப்படாமையினும் கூட்டமண்டபத்திற்குச் செல்லவில்லை.

திரு. இராஜகருணா கொஞ்ச நேரம் காத்திருந்து வீட்டுவெளியேறினார்.

சபைக் கூட்டத்திற்கு ஒருவருமே வராதபடியால் அத்தீர்மானம் அழிந்து விட்டதாகக் கருதவேண்டுமென்று திரு. இராஜகருணா வெகுகடித மூலம் கேட்டுள்ளனர் என அறியப்படுகிறது.

உபாத்தியாயரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டது

வட்டுவா, அக் 5

வட்டுவாவிலுள்ள உபாத்தியாயராகிய திரு. டி ஏ அலெக்ஸாண்டர் சுரவீர என்பவருடைய வீடு திருகுயாத்திரை சுமார் ராதுகள் தீ வைத்து முற்றாக எரித்துவிட்டதாக அறியப்படுகிறது.

வீடு பற்றி எரியும்பொழுது அவரின் பள்ளிகள் எண்மரும் கைப்பற்றப்பட்டனர்.

இது சம்பந்தமாக ஒருவர் போலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புனருத்தாரணத் திட்டங்கள் அதன் நிர்வாகத்தில் நடத்தப்படவேண்டுமெனபதைக் குறித்தும் அவர் கலந்து பேசுவார்.

பொருளாதாரக் கமிஷனில் ஆசியாவுக்குப் போதிய பலம் தேவை

ஆசியாவுக்கு ஒருமார்ஷல் திட்டம் கோருகிறது பிலிப்பைன்

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஒரு பொருளாதாரக் கமிஷன்

நிறத்திமிர் பற்றி ரெக்ரேகோரியூன் பத்திரையின சாட்டை

மான்கோ, அக் 5 கைத்தொழில் விவசாயங்களுக்கு ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் புதிய திட்டங்கள் வகுத்துடன் இந்திய ஸ்தானாதிபதி அபிவிருத்தியையுமென்றும், யாகமாஸ்கோ வந்ததும் சோவியத் ரஷியாவுக்கு விஜயம் செய்வதாகவும் பிரட்டிஷ் கைத்தொழில் சர்க்காரும் அதிகாரிகளும் ரஷியா எவ்வித நிலையிலும் அவருக்கு அளிக்கத் விமானிருந்தும் அதே நிலையில் இந்தியாவின் வரவேற்றையும் அவர் தியா இப்பொழுதிருக்கிறதெனும் அவரது ஸ்தானிக சிப்பந்தியும், பல லட்சியங்களைக் திகளும் வசிப்பதாகத் சோவி கொண்ட அரசியல் வாதியத் அதிகாரிகள் வழங்கம்போலன்றி விசேஷமான சிரத்தையுடன் செய்த உதவிகளையும் கவனிக்குமிடத்து புதிய இந்தியா சம்பந்தமாக ரஷியா விசேஷ ஊக்கம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

இந்தியா சம்பந்தமாக பிரிட்டன் கையாளும் கொள்கையையும் பிரிட்டனின் எதிர்கால நோக்கத்தையும் ரஷியர்கள் விடாமல் தாக்கி வருவதுடன் இந்தியா பிரிவினை செய்யப்பட்டதையும் கடுமையாகத் தாக்கி வருகிறார்கள், இப்பிரிவினை பால இந்தியாவின் எதிர்காலம் திருப்திகரமாக இருக்காது என்று ரஷியப் பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்து வருகிறன

இப்பொழுது பிரிட்டனின் அதிகாரம் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறதென்றும் இன்னும் சுதந்திரமான இந்தியா ஏற்படவில்லையென்றும் சுதந்திரம் பூரணமாகப் பரிணமிக்கவில்லை இந்தியா மனமுட்டுஉறவுகளைக் களைந்தெறிந்து ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல்களிலிருந்து விடுதலை பெறும் என்றும் ரஷியாகள் கருதுகிறார்கள்.

பிரிட்டிஷ் இதுவரை அனுஷ்டித்து வந்த ஏகாதிபத்திய ஆட்சி முறையின் பயனாக இன்றைய இந்தியாவில் அதிக மரணங்களும், நோயும், படிப்பறிவும், தொழிலாளரின் பரிதாபகரமான நிலையும் ஏற்பட்டிருக்கின்றனவென்று கருதுகிறார்கள். நாட்டை முன்னேற விடாது கீழான நிலையில் பிரிட்டன் அடக்கி ஒடுக்கி வைக்கிருந்ததால இவ்வித நிலை இருந்து வருகிறதென்றும் புதிய இந்தியா வலிமையடையுமென்றும், அது தனது பொருளாதாரம் மேலோங்கி வளர்வதுடன் ஆசியாவுக்கு ஒரு மார்ஷல் திட்டம் தேவையென்றும் ரஷியர்கள் கருதுகிறார்கள்.

ஆசியாவுக்கும் தூரகிழக்கு நாடுகளுக்குமாக அமைக்கப்படுகிற பொருளாதாரக் கமிஷனில் ஆசியாவுக்கு போதிய பிரதிநிதித்துவமிலாத படியால அதன் அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கப்படவேண்டும். இப்பொழுதுள்ள அங்கத்தினர்களுடன் மற்ற ஆசியா நாடுகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். சுய ஆட்சி இல்லாத ஆசியா நாடுகளின் பிரதிநிதிகள் ஆலோசனை அங்கத்தினர்களாக நியமிக்கப்படவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய அரசியல் சதுரங்கம்

பால்கன் பிரச்னை விவாதம்

ரஷிய-அமெரிக்க தகராறு

வாஷிங்டன், அக் 4

அமெரிக்கா ரஸ ஆராய்ச்சி போஷ்டி ரஷியா செல்லச் சோவியத் சர்க்கார் அனுமதி மறுத்ததால், ரஷிய ஸ்தானிகர்களுடன் ராஜதந்திரிகளும் அமெரிக்காவை நுழைய அனுமதிக்கப்படவேண்டுமென்று அமெரிக்க அந்நியநாட்டுக் கமிட்டியில் ஈட்டன் தெரிவித்தார்.

இத்தாலிக்கு கப்பல்கள் தானம்

ரோம, அக். 4

யுத்த நஷ்ட ஈடாக அமெரிக்கா எடுத்துக்கொண்ட யுத்தக் கப்பல்களை அமெரிக்கா திருப்பி இத்தாலிக்குக் கொடுத்துவிட்டதென்றும் அதே போன்று மற்றநேச நாடுகளும் செய்யுமென்று அமெரிக்கா விரும்புகிறதென்றும் இத்தாலிய அந்நிய நாட்டு மந்திரி தெரிவித்தார்

பால்கன் நாடுகள்

நியூயார்க், அக். 4

இன்று அரசியல் கமிட்டியில் பால்கன் பிரச்னை விவாதிக்கப்பட்டபோது, அமெரிக்காவும் பிரிட்டனும் கிரீஸ் தலையிடலாகாதென்று போலந்து பிரதிநிதி தெரிவித்தார் பால்கன் நாடுகளிலுள்ள அந்நிய துருப்புகள் அனைத்தும் வெளியேற்ற படவேண்டுமென்றும் ஏதத்தப்பிலும் குறைஞ் சாட்டப்படாது சமரசமான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்றும் எகிப்துப் பிரதிநிதி தெரிவித்தார். எல்லைப்புற சம்பவங்கள் அதன் மீதில் செயலாகுமென்று குறைஞ்சாட்டி அமெரிக்க பிரதிநிதி கூறியதை சீனப் பிரதிநிதி ஆதரித்தார். குற்றச்சாட்டை நீக்கி பிரான்ஸ் கொண்டுவந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாகவும், அசெம்பிளி ஏதாவது தீர்ப்புச் செய்தால் அதை யூகோ, பல்கேரியா, அல்பானியா ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறதா எனபதை அறிய விரும்புவதாகவும் அமெரிக்க பிரதிநிதி தெரிவித்தார்.

டென்மார்க் பிரதமர் மீது நம்பிக்கை இழப்பு

கோபன்ஹேகன், அக் 4

டென்மார்க் பிரதம மந்திரி கிறிஸ்டன் மீது இன்று நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேறியது புதிய பார்லிமெண்ட் தோதல் அக்டோபர் 30-ம் தேதி நடைபெறும்.

ஹங்கேரியில் கம்யூனிஸ்ட் திட்டம்

தனிப்பட்ட சொத்து, தங்க இருப்புகள், அந்நிய மூலதனம் இவைகளை தேசிய மயமாக்கும் கம்யூனிஸ்ட் திட்டத்தை இதரக் சகள ஆதரித்தன. இத்திட்டம் சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்படும்.

தப்பியோடிய ஜெர்மன் மாஜி மந்திரி

மூனிச், அக். 4

கள்ள மார்க்கெட் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருந்த மாஜி ஜெர்மன் மந்திரி டாக்டர் லேரிடல் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார்.

ஹிட்லர் உயிரோடிருக்கிறாரா?

வாரசா, அக் 4

பெர்லினிலிருந்த ஹிட்லரை டென்மார்க ஏற்றிச் சென்றதாக போலந்துள்ள ஒரு ஜெர்மன் கைதி தெரிவிக்கிறார் அவரைச் சில இடங்களில் உயிருடன் பார்த்ததாகச் சொல்லப்படுகிறது. (ராய்ட்டர்)

ஆசியவும் ரஷியாவும்

நியூயார்க், அக் 4

ஐக்கியதேச பொருளாதார கமிட்டியில் ரஷியா கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளதாகிறது:—

ஆசியாவுக்கும் தூரகிழக்கு நாடுகளுக்குமாக அமைக்கப்படுள்ள பொருளாதாரக் கமிஷனில் ஆசியாவுக்கு போதிய பிரதிநிதித்துவமிலாத படியால அதன் அங்கத்தினர்களின் தொகை அதிகரிக்கப்படவேண்டும். இப்பொழுதுள்ள அங்கத்தினர்களுடன் மற்ற ஆசியா நாடுகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். சுய ஆட்சி இல்லாத ஆசியா நாடுகளின் பிரதிநிதிகள் ஆலோசனை அங்கத்தினர்களாக நியமிக்கப்படவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 6, நட்டாத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஜூ புரட்டாசி மீ 20உ திங்கட்கிழமை

அரசாங்க உத்தியோகஸ்தர்களும் தொழிற் சங்க உரிமையும்

இலங்கை அரசாங்க குமாஸ்தாக்கள் தங்களுக்குத் தொழிற் சங்க உரிமை வேண்டி வேலை நிறுத்தம் செய்த விஷயம் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவ்வுரிமைப் போராட்டத்தில் தான் "கந்தசாமி" உயிர்விட்டது என்பதும் ஞாபகத்தில் இருக்கலாம். வேலை நிறுத்தம் அரம்பித்ததை வெற்றியுடன் முடிக்காமற் போனது தர்ப்பாக்கியமே ஏன் காரியத்தில் தோல்வியுற்றார்கள் என்பதை நாம் இப்பொழுது ஆராயத் தேவையில்லை.

உத்தியோகஸ்தர்களை மறுபடியும் வேலையில் வந்து சேரும்படி சொன்ன தலைமை உத்தியோகஸ்தர்கள் அவர்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றினார்களா என்பதை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட காலக்கிற்குள் வேலையில் வந்து சேருபவர்களுக்கு சண்டனை தண்டனையில்லாது வழமைபோல் வேலை கொடுக்கப்படும் என்ற சொன்ன வாக்குறுதி என்ன வாயிற்று?

வேலைக்கு வந்தவர்களைப் பல விடங்களுக்கு மாற்றிவிட்டார்கள். அவர்களுடைய சம்பள உயர்வு தடுக்கப்பட்டுப் போய் விட்டது. இவர்களது சங்கத்தை சட்ட விரோதமான சங்கம் என்று தீர்ப்பளித்தார்கள் இவ்விதமாகச் செய்தால் இந்த உத்தியோகஸ்தர்களின் ஊக்கத்தை ஆழ்த்திக் கெடுத்துவிடலாம் என்று மந்திரிகள் எண்ணினார்கள். அதே மந்திரி சபைக் கூட்டந்தான் இப்பொழுதும் வந்திருக்கிறது. அவர்கள் வேறு நியாயமான முறையில் நடந்து கொள்ளுவார்கள் என ஒருவரும் எதிர்பார்க்க முடியாது.

சென்ற தேர்தலில் இந்த உத்தியோகஸ்தர்களுக்கு பூரண தொழிற் சங்க உரிமைகளை வாங்கித் தருவதாக வாக்களித்து பாராளுமன்ற சபையில் புகுந்த அநேகர் இருக்கிறார்களே, அவர்களது நிலைமை யென்ன வென்பதைத்தான் நாம் யோசிக்கவேண்டியிருக்கிறது. இலங்கை சமசமாஜிக கட்சியாருடைய அதரவில் ஏற்கெனவே குறிப்பிட்ட வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் பெற்றது என்பதை மறக்க வேண்டாம். இவர்கள் இவ்விஷயத்தில் முழுதும் ஈடுபட்டுழைக்கக் கடமைப்பட்டவர்கள். போல்ஷிவிக் கட்சியார்களும், கம்யுனிஸ்ட் கட்சியார்களும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியாருடைய, மற்றும் பல சுயேச்சைக் கட்சியார்களும் இவர்கட்கு வாக்குறுதி கொடுத்து உள்ளே நுழைந்தவர்கள். அப்படியிருக்க இக்கூட்டத்தார் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை மறக்கமாட்டார்கள் என்றே கருதுகிறோம்.

இக்கூட்டத்தார்கள் ஏதாவது உருப்படியான காரியம் செய்ய எண்ணுமுன் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விட்டுத் தங்கள் தங்கள் மனப்போக்கின் பிரகாரம் காரியங்கள் நடத்த வேண்டும் என்றெண்ணுவது முட்டாள்தனம். பல கட்சிகள் சேரும் இடத்தில் ஒற்றுமைப்படக் கூடிய இடங்களும் இருக்கும் இந்தக் கொள்கைகளைப் பின்பற்றியாவது இவர்கள் ஒன்று கூடி உழைக்க முன்வர வேண்டும் என்பது எமது யோசனை. தாங்கள் சண்டையிட்டுக் கொண்டிருப்பதால், தாங்கள் வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முடியாதுபோகும்.

அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய நிலைமை இப்பொழுது திருப்தியாகவில்லை. மந்திரிகளாக வந்திருப்பவர்களின் மனோபாவமும் சரியில்லை. நாட்டின் பொருளாதார நிலைமையும் சரியாகவில்லை பொருளாதார நிலைமையைக் காட்டி இந்த உத்தியோகஸ்தர்களைக் துன்புறுத்தக்கூடும். அவர்களை மாத்திரமல்ல தொழிலாளர் விஷயங்களையும் கவனியாது விடக்கூடும். ஏன்? யூ. என். பி. என்பது முதலாளிமார்களின் கூட்டம். இந்நிலையில் என்ன செய்யப் போகிறார்கள்? யூ என். பிக்கு எதிர்க்கட்சியாக 5 கூட்டத்தார்கள் இருக்கிறார்கள். அதாவது சமசமாஜக்கட்சி, போல்ஷிவிக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இந்தியக் காங்கிரஸ் கட்சி பஞ்சபாண்டவர்கள் மாதிரி 5 பேர் கௌரவர்கள் பாண்டவர் பக்கினி திரௌபதியை துயிலுரிந்து அவமானப்படுத்திய காலத்தில் பஞ்சபாண்டவர்கள் எப்படித் தலைகுனிந்து வாளாவிருந்தார்களோ அதேபோல் நமது பஞ்சபாண்டவர்களும் சும்மாவிருப்பார்கள் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. பெரும் பராக்கிரமம் படைத்தவர்கள் என்று பேசிக்கொள்ளும் இந்த 5 கணவர்களின் உதவியை விட்டு அரசாங்கக் குமாஸ்தாக்கள் இதர தொழிலாளர்கள் என்ற திரௌபதி எந்த கிருஷ்ண பரமாத்மாவைத் தேடப்போகிறார்களோ தெரியவில்லை. வாய் வீரத்தைவிடக் கைக்காரியமே மேல் என்று எமது வாய் வீரர்களுக்கு அறிவுறுத்த வேண்டியிருக்கிறது.

"அரசியல் ஆதிக்கங்கோரும் நன்றிகெட்ட தமிழன்"

'மலைப் பிரதேசங்களை இந்தியன் கைப்பற்றிக் கொண்டான்'

இனப்பற்றால் தமிழ் காங்கிரஸும் இந்தியன் காங்கிரஸும் ஒன்றுபடின் ஆபத்து

சிங்கள ஜாதி, மத, கலாச்சாரத்தைப் பாதுகாக்க சிங்கள மகாசபை சீறியெழவேண்டும்

மந்திரி பண்டாரநாயக்கா பத்திரிகை எழுதும் விந்தை

சுகாதார - ஸதல தாபன மந்திரியான திரு. பண்டாரநாயக்காவின் பத்திரிகையான "சிங்கள பலய" 4-10-47ல் பின்வருமாறு எழுதுகிறது:-

எங்களுடைய சகோதரர்களென்றும, எங்களுடைய ரத்தக்கலப்புடைய உறவினர்களென்றும, எங்களுடைய மச்சான்மார்களென்றுப சொல்லிக் கொண்டு, கௌபீனத்தோடு மாத்தரம் இங்கே வந்து, குபேரர்களாகி இந்நாட்டு நிர்வாகப் பொறுப்பையும் கேட்டு சச்சரவு பண்ணுகிற இந்தியாக்காரரானே, சிங்களவர்களான எங்களுக்கும் எமது பௌத்த சமயத்திற்கும் விலக்க முடியாத மரணச்சாட்டை கிடைக்கப் போகிறது. இதை எதிர் நின்று முறியடிக்க இன்றே சிங்களவர்கள் தயாராகி விடவேண்டும்.

பல்வளம் பொருந்திய இலங்கையிலே தேயிலைச் செடியின் கீழ் இருக்கிறதென்று சொல்லப்படுகிற "மாசி"த்துண்டுகளை பொறுக்குவதற்கு ஆசைப்பட்டு, கரப்பன் சிரங்குபோன்ற சரீரத்தை சொறிந்து கொண்டும், காலரா - வைகூரி துர்வாற்றங்களைப் பொதிகட்டிக் கொண்டும் நம் சிங்கள நாட்டிற்கு படையெடுத்து வருகிற சின்னையாவும், ராமசாமி-மீரூட்சியும் எங்களுக்கு மூட்டப் போகிற தீ சுலபமாக அணையாது. ஒரு சமயம் எங்கள் எதிர்கால பரம்பரைக்கு அதுவோர் கொள்ளிநீதியாய் விடும் எனபதில் என்ன சந்தேகம்?

பற்பல வேஷங்களிலும் இந்நாட்டிற்கு வருகிற ஒவ்வொரு அரசியலும், ஒவ்வொரு ஜாதியானும, ஒவ்வொரு சமயத்தவனும ஏதோ ஒருவித செப்படி வித்தைகளினால் தங்கள் சகோதரதவத்தற்கும், மச்சான் முறைக்கும் நம்மவரை ஆளாக்கி, இலங்கையையும் சிங்கள ஜாதியின உரிமையையும் தட்குகுந்த முறையில சிறுமைபினனடப்படுததி வருகிறார்கள் இப்படியாக நமது ஜாதியையும உரிமையையும் நாம அனுபவிப்பது அல்லது பாதாளத்தற்கு தள்ளிவிட முனைந்திருக்கிறார்கள்

இலங்கையையும் சிங்கள ஜாதியையும் காப்பாற்றவோ அன்றி நாசமாக்கிவிடவோ, சிங்களவர்களைக் கொண்டதுமான இடது சாரிக்கட்சிகளும் இருக்கிறார்கள். இவர்கள் நம்மையும் நமது பௌத்த சமயத்தையும் நாசமாக்கவேயன்றி காப்பாற்றவல்ல என்பது பகிரங்கம். இவர்களும் ஆந்திய மச்சான்களின் அநுதாபிகளே.

பற்றப்படி அகில இலங்கைத் தமிழர் காங்கிரசும், இலங்கை இந்தியன் காங்கிரசும் தனித் தனி வேறு கட்சியாய் இருந்த போதிலும் தமிழர் என்ற ஹோதாவிலேயே சகல அரசியல் நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள். ஆனால் சிங்களவர்களான எங்களுக்கு ஜாதியின பேரால் ஒரு அரசியல் கட்சியும் இல்லாதிருப்பது மிகவும் வெடக்கேடுதானே. சிங்களவர்களான பெரிய-பெரிய மனிதர்கள் எவற்றைத்தான் செய்துவிடப் போகிறார்கள்?

புதிய பார்லிமெண்டுத் தேர்தலின் முடிவுகளிலிருந்து கந்த உடறட்ட (மலை நாட்டு) தொகுதிகளுக்கு மாத்திரம் ஏற்பட்டிருக்கும் ஆபத்து எவ்வளவு என்று அறிந்து கொள்ளலாம் இங்கேயெல்லாம் உண்டாய இருக்கும்-ஏற்படப் போகும் இககட்டுகளை சிங்களவர்கள் கண்டிப்பாய் அறிய வேண்டியது, அதனை செய்ய வேண்டியது அவசியம். சிங்களவர்களாலே-சிங்களவர்களின உரிமையினாலே-சிங்களத் தலைவர்களாலேயே உயிர் வாழ்ந்து-உயர்நிலைமைக்கு வந்ததும அரசியல் ஆதிக்கம் கேட்கிற இந்த நன்றிகெட்ட தமிழன செய்தது என்ன?

ஒரு போதும் தெரியாத-கண்டிராத ஒரு உதவியும செய்யாத ஒன்றுமே தெரியாத இந்தியனுககே கந்த உடறட்ட தொகுதிகளையெல்லாம் கைப்பற்றிக் கொடுத்தனர். சிங்களவர்களுக்கு சேரவேண்டிய மேற்பகுதிக் தொகுதிகளெல்லாம் இந்தியர்களுக்கே அர்ப்பணமாய்விட்டது. அவர்களுககே உரிமையாய்விட்டது.

இவ்விதமான செய்கைகளிலிருந்து தெரிவதென்ன? எந்த இந்தியனோ இலங்கைத் தமிழனோ தனனுடைய வாக்குரிமையை ஒருபோதும் சிங்களவனுக்குக் கொடுக்கமாட்டானென்பதே. அபபடித்தான் தமிழன் தன் ஜாதிக்கு சாதகமாய் இருப்பதைப்பற்றி எங்களுக்கு வைராக்கியம் கிடையாது. எனினும் சிங்கள ஜாதிக்கும்நாட்டுககும் செய்யவேண்டிய கடமைகளை அலட்சியம்செய்து விட்டதினால்தான் நாம் அந்த இந்தியனோடும் தமிழனோடும் வைராக்கியமும் குரோதமும் கொள்ளவேண்டியிருக்கிறது.

இப்படியெல்லாம் நமக்கு ஏற்படுவதற்குகாரணமென்ன? சிங்களப் பெரியரயுடைய ஒபலம் பொருந்திய அரசியல் கட்சி சிங்களவர்களுககென்றே இல்லாதிருபபதேயாகும். மோனதைப்பற்றியெல்லாம் பிரலாபப்படுவதில பிரயோசனமிலலை. தற்போதுள்ள சூழ்நிலையைக் கவனித்து வருங்காலத்துக்கு அரண்கட்டுவோம். அதற்காக நமமை நாம் தயார் செய்து கொள்ளுவதே.

சக்திவாய்ந்த தமிழர் கும்பல்கள் ஒருசமயம் சிங்களவர்களோடு போரிட முன்வரக்கிருந்துவிட்டால் அன்றைக்கு சிங்களவர்களால் செய்யவேண்டியதென்ன? மாண்டுமடிந்து போன நாக--யக்ஸ--ராட்சத பூட்டன் மார்களுகு காணிக்கை செலுத்த வேண்டியதே

சிறிது காலத்திற்குமுன் பிரபலம் பெற்றிருந்த 'சிங்கள மகாசபா" இப்பொழுதிருந்திருந்தால், இன்றுள்ள நிலைமையில இந்த அந்நியரின சூழ்ச்சிகளுக்கும அக்கிரமங்களுக்கும இடமே இராது ஆனபடியால். சிங்களஜாதியும் எமது கலாசாரமும் காபபாற்றப்பட வேண்டுமானால் சிங்களவர்களைக் கொண்ட "சிங்கள மகாசபா" என்னும் அரசியல் கட்சிமுன் வந்து ஆவனசெய்யவேண்டும். நாமும் நமது கடனமையைத் தவறாது செய்யவேண்டும். இது சமபந்தமாக நாம் வேண்டுகிற ஒரே ஒருவர், வாக்குச் சாதுரியமும், தேசாபிமானமும் சாதியாபிமானமும் உள்ள திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவேயாகும்.

1400 முஸலிமல்லாதார் வேலை நீக்கம்

பாக்கிஸ்தான் ராணுவ எஞ்சினீயரிங் இலாகா சிபபந்திகள

கராச்சி, அக். 2

ராணுவ இஞ்சினீயரிங் இலாகாவைச் சேர்ந்த 1400 ஹிந்து, சீக்கிய உதத்தியோகஸதர்களை பாக்கிஸதான் சர்க்கார் வேலையிலிருந்து விலக்கிவிட்டதாகத் தெரிகிறது.

பாலஸ்தீன அமெரிக்கா கைப்பற்றுமா?

ஹென்றி வாலஸ அங்கு செல்கிறார்

குடியேறவரும் யூதர்களை பிரிட்டன் சைப்ரஸ் தீவுக்கு அனுப்புகிறது

நியூயார்க், அக் 4

அமெரிக்க குடியரசு சர்க்காரின் மாஜி உப தலைவரும் மாஜி வர்த்தக மந்திரியுமான ஹென்றி வாலஸ் நேற்றிரவு பின்வருமாறு தெரிவித்தார்:- நான் பாலஸதீனத்திற்குச் சென்று யூதர்களையும் அராபியர்களையும் சந்தித்துப் பேசப் போகிறேன் அங்குள்ள விவசாய நிலையை ஆராயச்சி செய்வேன் அங்கு நான் பொதுக் கூட்டங்களில் பிரசங்கம் செய்யப்போவதில்லை. நான் அங்கு அறியும் விஷயங்களை எனது பத்திரிகை 'நியூ ரிபப்ளிக்' கில் பிரசுரம் செய்வேன்.

குடியேற வந்த யூதர்கள்

ஹைபா, அக் 4

ஐரோப்பாவிலிருந்துசட்டவிரோதமாக பாலஸ்தீனத்தில் குடியேறக்பல்களில இங்கு வந்திறங்கிய யூதர்களை 3 பிரிட்டிஷ் கப்பல்கள் ஏற்றிக் கொண்டு சைப்ரஸதீவில் இறக்கப் புறப்பட்டுச் சென்றன.

அமெரிக்கா கைப்பற்றுமா?

நியூயார்க். அக். 4

ஐக்கிய தேச ஸ்தாபனம் பாலஸதீன சம்பந்தமாக ஒரு முடிவுசெய்யாமல் பிரிட்டன் அங்குள்ள துருப்புகளை காலி செய்யுமாயின் அமெரிக்க துருப்புகள் பாலஸதீனத்தைக் கைப்பற்று மென்று சொல்லப் படுகிறது. அமெரிக்க அந்நியநாட்டுக் காரியாலயத்தார் இதைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள். பாலஸதீனத்தை ரஷியா கைப்பற்று மென அஞ்சியே அமெரிக்கா இவ்வித நடவடிக்கை எடுக்கு மென்று சொல்லப் படுகிறது.

பின்னரே எகிப்து பிரச்னை

லண்டன், அக். 3

இருவார களுக்கு முன் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெவின் அராபிய லீக் காரியதரிசி அஸ்ஸாம்பாஷாவைச் சந்தித்துப்பேசினார் அஸ்ஸாம்பாஷா எகிப்து பிரச்னையை எடுத்துரைத்தார் பாலஸதீன பிரச்னை முடிந்த பிறகுதான் எகிபது பிரச்னையைப் பற்றிப் பேசமுடியுமென்று பெவின் கருதுகிறார்.

"அரசியலையும் சமயத்தையும் பிணைக்காதீர்கள்"

பிக்குகள் சங்கத்தில் பேச்சு

கொழும்பு, அக். 5

நேற்று நடந்த அகில இலங்கை பிக்குகள் காங்கிரஸ் கூட்டத்தில் சங்கை டெஹிகாஸபே பன்னசாரதேரோ தமது தலைமைப்பேருரையில் கூறியதாவது:-

"பிறிவேனாக்களில் கல்வியை உயர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சி செய்யாதிருக்கின்றது.

"பொதுத் தேர்தல்கள் இலங்கையில் நடைபெறும் காலங்களில்தான் புத்த சமயத்தின் பாதுகாப்பாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள், தம் சமயத்தைப் பற்றி நினைகிறார்கள். இந்நிலை மாற வேண்டும்."

சங்கை. பொல்வத்தை புத்ததத்தத்தேரோ, பேசிய பொழுது அரசியல் வாதிகள் சமயத்தை அரசியலுட் புகுத்துவது நாட்டிற்குக் கெடுதி விளைக்குமென்று கூறினார்.

மேலும் அவர் பேசியதாவது:- "ஒரு அரசியல் கட்சி சமசமாஜியர் எங்கள் கோவில்களை எரித்துவிடுவார்கள் என்று கூறியபோதிலும், அப்படி ஒன்றும் இதுவரையில் நடைபெறவில்லை ஆகவே எவர் பொய்யர் என்பது விளங்கிவிட்டது."

இந்திய மாகாண மந்திரிகள் மகாநாடு

பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பண்டித நேருவுடன் ஆலோசனை

ஜூனாகத் சமஸ்தானத்தின் ஆக்கிரமிப்பு

புதுடில்லி, அக் 4

இந்திய மாகாணங்களின் பிரதம மந்திரிகள் யாவரும் உணவுக் கொள்கை சமிட்டிக் கூட்டத்திற்கு டில்லி வருகிறார்கள். இந்த சந்தர்ப்பததை இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு உபயோகப்படுததிக் கொண்டு, இந்தியாவில் சமீபதகில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சமாளிப்பதற்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுததுக் கொள்வதுபற்றி அவாகளுடன் கலந்து பேசுவார். சர்தார் பட்டேலும் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்.

பஞ்சாப், டில்லி நிலைமை

தாமதித்துக் கிடைக்த ராணுவ அறிக்கை தெரிவிப்பதாவது:- சென்ற செவ்வாய்க்கிழமை முஸ்லிமல்லாத 80,000 அகதிகள் கூட்டம் மேற்கு பஞ்சாப்பில் லயால்பூர் ஜில்லாவில் தாக்கப்பட்டதால் 30 பேர்கள் மாண்டனர்; 20 பேர் காயமடைந்தனர்.

தாக்கியோரைத் துருப்புகள் சுட்டதில் 80 பேர்கள் மாண்டனர். துருப்புகளில் 4 பேர்காயமடைந்தனர்.

டில்லியில் நேற்றிரவு பூரண அமைதி நிலவியது ஓரிடததில் கல் வீச்சு நடந்தது. போலிசார் சில வீடுகளைச் சோதித்து அங்கிருந்த கற்குவியல்களை அப்புறப்படுத்தினர்.

ஜூனாகத் நடவடிக்கை

புதுடில்லி, அக் 5

பிரதம மந்திரி காரியதரிசி அறிவிப்பதாவது:-காத்தியவார் சமஸ்தானதைச் சேர்ந்த போர்பந்தர் வேண்டிக்கொண்டபடி சில இந்தியத் துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த சமஸ்தானம் பாக்கிஸ்தானில் சேர்ந்த ஜூனாகத் சமஸ்தானத்திற்கருகே இருக்கிறது. ஜூனாகத் சமஸதான துருப்புகள் சமீபத்தில் இந்திய யூனியனைச் சேர்ந்த பார்பாரியாவாக சமஸதானத்தைக் கைப்பற்றியது இதுசம்பந்மாக இந்திய சர்க்கார் பாக்கிஸ்தானுடனும் ஜூனாகத்துடனும் சமரசம்பேசி முடிவுக்கு வரத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பிரஞ்சு பிரதேசங்கள்

18, 19 வது நூற்றாண்டுகளில் பிரஞ்சுக்காரர்கள் நிறுவியிருந்த தொழிறசாலைப் பிரதேசங்கள் சில பிரஞ்சு சர்க்கார் நிர்வாகத்திலிருந்தன சென்னை ஒரிசா, பம்பாய் மாகாணங்களிலுள்ள இச்சிறு சிறு இடங்கள் இந்தியா சுதந்திரமடைந்தபின் அதற்கு பிரான்ஸ நன்னடபிக்கை பரிசாக வழங்கியிருந்தது. இன்று அவைகள் மீது பறந்து கொண்டிருந்த பிஞ்சுக் கொடிகள் அகற்றப்படடு இந்திய தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

கராச்சியில் சஹ்ரவர்தி

கராச்சி, அக். 4

மாஜி வங்க பிரதம மந்திரி சஹ்ரவர்தி சமாதான தூதராக கராச்சிக்கு வந்திருக்கிறார். டில்லியில மகாத்மாவுடன்வெகு நேரம சம்பாஷித்து வந்த இவர் இங்கு காயிதே ஆஸாம் ஜின்னாவைச் சந்தித்துப் பேசுவார்.

கராச்சியில் வழிப்பறி; வைர வியாபாரி பலி

ரூ. 12,000 பெறுமான நகைகளுடன் மறைந்தனர்

கராச்சி, அக். 3

இன்று அதிகாலையில் ஆயுதந்தாங்கிய ஒரு கொள்ளைக் கூட்டத்தார் ஒரு வைர வியாபாரியைச் சுட்டுக் கொன்று அவரிடமிருந்த ரூ. 12,000 பெறுமான நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டனர் போலீஸ் உடனே ஸதலததிற்கு வந்து கொலையாளிகளைத் தேடிக் கொண்டிருக்கிறது.

சுதந்திர இந்தியாவில் தாய்பாஷைகளுக்கு விமோசனம்

ஐக்கிய மாகாணத்தில் ஹிந்திக்கு மகத்துவம்

மேற்கு வங்காளத்தில் வங்காளி அரசாங்க பாஷையாகிறது

லக்ஷ்மணபுரி. அக். 5

ஹிந்து பாஷையை மாகாண சர்க்கார் பாஷையாகவும் தேவநாகரி எழுத்தை சர்க்கார் லிபியாகவும செய்ய ஐக்கியமாகாண சர்க்கார் தீர்மானித்திருந்தனரல்லவா? அந்தத தீர்மானதைத இப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரமாகாண சர்க்கார் சில நடவடிக்கைள் எடுததிருகின்றனர். சிவில் ப்ரொஸீஜர் கோட்சட்டதின்படி கீழ்மகாகார்ட டுகளில் உபயோகிககவேண்டிய பாஷை இன்னதென்று அறிவிக்கமாகாணசர்க்காருக்கு அதிகாரம் உண்டு. கரிமினல் ப்ரொஸீஜர் சட்டத்திலும் இத்தகைய வசதியிருக்கிறது.

'தேவநாகரி எழுத்தில் எழுதப்படுய ஹிந்தியே இனி இநதக கோர்ட்டுகளில் உபயோகிக்கப்பட வேண்டும்" என்று ஐக்கிய மாகாண சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

இந்த மாறுதல் அமுல் வருவதில வசதிசெய்வதற்காக உர்துவும ஆங்கிலமும் உபயோகிககப்படுவதை சிறிது காலம வரை அனுமதிக்க சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இவை எவ்வளவு காலம் வரை உபயோகிக்கபபடலாம என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை ஆனால் சந்தாபதிற்கேற்றபடி சர்க்கார் அவ்வப்போது அறிவிப்பார்கள் என்று தெரிகிறது.

சர்க்கார் உதத்தியோகங்களில் ஹிந்தி அறிந்தவர்கள எததனை பேர் இருககின்றனர் என்பதைக் கணககெடுக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது ஹிந்தி தெரியாதவர்கள அதைக் கற்க அவகாசம் அளிக்கப்படும்.

இனிஉத்தியோகங்களில் ஆங்கிலததின் ஸ்தானத்தை ஹிந்தி வகிக்கும்.

இனி போட்டி பரீக்ஷைகளுக்கும் இலாகாக்களிலேயே நடக்கும் பரீக்ஷைகளுக்கும் ஆஜராகவிரும்புவோருக்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டுவது அவசியமற்ற யோகியதாம்சங்கள் சமமாக இருந்தால் ஹிந்தி தெரிந்தவர்களுக்குப் பிரதானத்துவம் அளிக்கப்படும். எழுதத்தறிவு அவசியமென்று கருதப்படும் உத்தியோகங்களுக்கு ஹிந்தி தெரிந்தவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சர்க்கார் வற்புறுததுவர், ஹிந்தி தெரியாத ஒருவரை அதிகாரிகள் தேர்ந்தெடுததால அவ்விதம் தேர்ந்தெடுப்பதற்கானகாரணததை அவர்கள் அறிவிக்க வேண்டும. இவ்விதம் நியமிக்கப்படுவோர் உத்தியோக பூர்வமாக நியமிக்கபடுவதற்கு முன்னால் ஹிந்தி கற்க மோத அவகாசம அளிக்கபபடும, அந்தக் காலததிற்குள் அவர் ஹிந்தி கறகாவிடடால் அவருடைய உதத்தியோகம ரதது செயயபபடும. சிலவிசேஷ சந்தாப்பங்களில் இந்ததகால அளவு நீடிக்சப்படும். ஆனால 4 மாததிற்கு அதிகமாக அவகாசம அளிககப்படாது.

இந்த மாறுதல் சீக்கிரம் அமுலுக்கு கொண்டு வருவதில உளள முக்கிய கஷடம, போதிய அளவு டைப்படிகககு இயந்தரங்கள இலலாததே என்று கூறபபடுகிறது இந்ததகுறையை நிவாததிப்பது பற்றச் சாக்கார் தீவிரமாக ஆலோசித்து வருகிறனர்.

சர்க்கார் காரியாலயங்களில் ஹிந்தி போர்டுகள்

புதுடில்லி, அக் 5

ஏற்கெனவே சில சர்க்கார் காரியாலய வாசலகளில் தேவநாகிரிலிபியில எழுதபபட்ட ஹிந்தி போர்டுகள தொங்க விடப்பட்டு இங்கிலீஷ் போர்டுகள் அகற்றபபடும வேலை அபிவிருதி நயடைந்து வருகிறது.

'வங்காளி' சர்க்கார் பாஷையாகிறது

மேற்கு வங்க சர்க்கார் உத்தரவு

கல்கத்தா, அக். 5

மேற்கு வங்காளத்தில் வங்காளி மொழியை சர்க்கார் பாஷையாகச் செய்வதில் முதல்படியாக சர்க்கார் காரியாலயங்களில் கடடுகளில் எழுதும் குறிப்புகள வங்காளி மொழியிலேயே எழுதப்பட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடடிருககின்றனர். சில பிரதியேக வார்ததைகளுக்கு மாததிரம் ஆங்கிலததை உபயோகிததுக் கொள்ளலாம். இந்த உத்தரவே வங்காளி பாஷையில பிறப்பிககப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு பஞ்சாப்பின் நிலைமை

14 லட்சம் அகதிகள்

இந்தியாவிலிருந்து விமானத்தில் உணவு

புதுடில்லி, அக் 2

மேற்கு பஞ்சாப்பைச் சேர்ந்த தண்டலிபன வாலாவலிருந்து வந்த முஸ்லிமலலாத அகதிகளுக்கு இந்திய ராணுவம் காவல் புரிந்து வடுமையில் சிலர் மறைந்திருந்து அதன் மீது பலதத துப்பாக்கிப பிரயோகம் செய்தனர் இதன் விளைவாக ஓர் இந்திய மேஜர் கொலை பட்டார். மற்றும 2 இந்தய சிப்பாய்கள் பலதத காயமடைந்தனர். இதுபற்றிய மேல் விவரங்கள் விசாரிக்கபபட்டு வருகின்றன.

ராணுவ அதிகாரியொருவர் இந்தத தகவலை வெளியிட்டார்.

இந்த அகதிகளின் கூட்டம் ஜாரன்வாலாவுக்கு வந்து கொண்டிருந்ததாகவும் தாக்கியவர்கள் பிரென் பீரங்கியையும் உபயோகித்ததாகவும், அகதிகளைச் சிக்கவைக்க பொறிகள்வைத்திருந்ததாகவும் அமிர்தசரஸிலிருந்து வந்துள்ள மற்றொரு தகவல் கூறுகிறது.

கலசுவாலாவிலிருந்து நடந்து வந்த 50,000 பேர் அடங்கிய முஸ்லிமலலாத அகதிகளின கூட்டதது 2-வது பகுதி டேராபாபாநானக்குக்கு வந்து சேர்ந்தது மழையின விளைவாக இந்தக் கோஷ்டி இரண்டாகப பிரிக்கப்பட்டிருந்தது. இதன் முதல பகுதி ஏற்கெனவே டேராபாபாநானக்குக்கு வந்து சேர்ந்து விட்டது.

15,000 முஸலிம் அகதிகள் அடங்கிய ஒரு கோஷ்டி எவ்விதச் சம்பவமும இலலாமல் இன்று அமிர்தசரஸைக் கடந்து சென்றது. மீனல் 1,50,000 முஸலிம அகதிகள் இருக்கின்றனர்.

இரு திசைகளிலும் ரயில் மூலம அகதிகள் அனுப்பப்படுவதில்லை. ஆனால் லொறி மூலம் 1700 முஸலிம அகதிகளபாகிஸதானுக்கும 3,200 முஸலிமலாதவர்கள் அமிர்தசரஸ பிரதேசததிற்கும் அனுப்பப்பட்டனர்.

ஸரகோடாவிலிருந்து லயால்பூருக்கு வந்த ஹிந்து சீகிய அகதிகள் கோஷ்டி ஒன்றை செப்டம்பர் 30-ம தேதி முஸலிமகள் தாககியதாக தகவல் கிடைததிருக்கிறது. இதில் பலர் மாண்டனர். இதுபற்றி விசாரிக்குமாறு லாகூர் பிரதேச ராணுவததிற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பாலஹர்ஷாவில் ரயில் பெட்டி ஒன்றில் முஸலிமலலாத 15 பேர் பிரவேசித்து பிரயாணிகளைத தாக்கியதாகக் கூறபடுகிறது. ராணுவதினர் வருவதற்குள் தாக்கியவர்கள் ஓடிவிட்டனர். தாக்கப்பட்டவர்களில் ஒருவரும் இறக்கவில்லை. 6 பேர் காயமடைந்தனர் ரயில சோதனை போடப்பட்டபொழுது பல ஆயுதங்கள் பிடிபடடன. ஒருவர் கைது செய்யபபட்டார்.

எல்லைப்புறச்சீல் எல்லையில் உள்ள முஸ்லிம அகதிகளனைவரையும் ராணுவத்தனர் வெளியேற்றி அழைத்து வந்து விடடனர். பெரிய கூட்டங்கள இந்த அகதிகளைத தாககவந்ததாகவும், சிவல் அகாரிகள் அவர்களைக் கலைந்து போகுமபடி கேடுக்கொண்டதாகவும தெரிகிறது.

கோர்வாலாவில் சில ஹிந்துக்கள் வண்டியில் வந்து கொண்டிருந்தபொழுது, தாககப்பட்டதால் 5 பேர் மாண்டனர். இருவர் காயமடைந்தனர். சிலரைப் போலிஸார் கைது செய்தனர்.

விமானத்தில் உணவு சென்றது

புதுடில்லி, அக் 2

இன்று டில்லியிலிருந்து வாகுக்கு 4 விமானங்களில சமைத்த உணவு அனுப்பப்பட்டது. கிழக்கு பஞ்சாபுக்கு வருவதற்காகக் காததிருக்கும் முஸ்லிமலலாத அகதிகளுக்கு இந்த உணவு வினியோகக்கப்படும். சென்ற சில தினங்களாக இவர்கள் பட்டினி கிடப்பதாகக் கூறப்படுகிறது

பே. பஞ்சாப்பில் 14 லக்ஷம் ஹிந்து சீக்கிய அகதிகள

புதுடில்லி, அக். 2

மேற்குபஞ்சாப்பில்பல்வேறு, பகுதிகளில் செப்டம்பர் 29-ந் தேதியன்று 14,35,000 ஹிந்து சீக்கிய அகதிகள பாக்கியிருப்பதாக உத்தியோக பூர்வமாக மதிப்பிடப்படுகிறதென்றுஅமிர்தசரஸ செய்தியொன்று கூறுகிறது

லயால்பூரில் மாத்திரம் 3,97,200 அகதிகள் இருக்கின்றனர். பெஷாவாரில் 5,000 அகதிகள் தான் இருக்கின்றனர். முகாம்களுக்கு வெளியே சிறு கூட்டங்களாகவும் பெரிய கூட்டங்களாகவும 3 லக்ஷம் அகதிகள் வசிதது வருகின்றனர்

ஜலந்தர் ரேஞ்சில அகதிகள் தாக்கபபடுவது சம்பந்தமாக விசாரிக்க பிரதியேக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள ஏற்கெனவே 30 பேரை கைது செய்து ஏராளமான கள்ள ஆயுதங்களையும் ரூ 50,000 மதிப்புள்ள கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

வெள்ளையரே வெட்கித் தலை குனிய வேண்டும்

150 வருட பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட விளைவே பஞ்சாப் கலகம்

மேனாட்டாரின் மீது ஸ்காட் பாதிரியார் குற்றச்சாட்டு

காந்திஜிக்கு லண்டன் டைம்ஸ் புகழ்மாலை

லண்டன், அக் 3

"நம்மேல் நாடடு முறையிலே காந்திஜியை ஒளந்து பாரபதென்றால் முடியாது சிவசமய சுத்த பொறுப்பற்றவராகத் தெரியும். அவர் எடிப்பட்டவரென்று நிச்சயமாக வரையறுக்க முடியாது" என்று கனசர் வெடவ் லண்டன் டைம்ஸ் இன்று மஹாதமா ஜனன விழாபற்றி எழுதுகையில கூறுகிறது.

"இந்த ஓடிந்து விழுகிற வைராக்கியப பேர் வழியிருகிறீரே, ஒரு சமய பாரம சாதுவாகத் தெரிகிறது. ஒரு சமயம் சீர்திருத்தகாரராகத் தோன்றுகிறது. ஒரு சமயம் ராஜீய வாதிபோல இருக்கிறார். சில சமயம் அசல் புரட்சிகாரராகவுமிருக்கிறார். மேல்நாட்டாருக்கெல்லாம அவர் பெரும் புதிர் போலத் தானிருக்கிறார். அவரவர்களுக்குத் தங்கள தங்கள மனசிலிருகுகும் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அவரை மதிப்புப் போடுகிறார்கள் இல்லாவிடில் அந்தந்தசமயத்தில் எதில் ஈடுபட்டிருக்கிறாரோ அதற்குத் தகுந்தாறபோல சொல்லுகிறார்கள். அவர் ஆயுசு முழுதும அஹிம்சா வாதியாயிருந்தும், அவரமனசு இந்த விஷயததில் இப்படிததானிருக்கும் என்று சொலல முடியவில்லை அப்படியிருந்தும் அவரா தேசததார் அவரை அறிய முடிகிறது.

காந்திஜியின் விசை

அவருடைய கொள்கையும், போக்கும் அததேச ஜனங்களின் போக்கை ஒதிருபபதாலேயே சாத்தியமாகிறது. அதில்தான் அவரின் விசை.

அடிக்கடி அவர் காலம் அஸதமித்துவிட்டதென்று எதிரிகளும் அன்பர்களும சொன்னார்கள். ஆனால் அதெலலாம் வீணாயின. சகல கஷ்டத்திலிருநதும், அதிக செல்வாக்குடனேயே முன்னேறி எழுந்தார்

இன்று அவர் வார்ததை கோடிக்கணக்கான மக்களுக்கு வேதவாக்கு. மனித ஜாதியில ஐந்திலொருவருக்குச் சுதந்தரததைத் தந்திருக்கும் தேசிய சர்க்காரிலிருப்பவர்கள் அவரால் ஒழுக்கமுற்றவர்கள்.

இன்றைப நெருக்கடியிலும அந்தசெல்வாக்கு பிரமாதமாகத் தெரிகிறது. மவுண்ட்பேட்டன் பிரபு சொனன பிரகாரம் காந்தியின் 'ஒண்டியாள எல்லைக கமிஷன்' (காந்திஜியின் தனி முயற்சி), வங்காளத்தில் பல்லாயிர மககளைக் காப்பாற்றியிருக்கிறது.

மற்றெல்லா சமயங்களையும் விட, இனறே அவரது அஹிம்சா போதனை இந்தியாவுக்கு அத்யாவசியம் அவதிப்படும பாஞ்சாலத்தில் சமாதானச்சை

சென்னை மாகாணம் பூராவிலும் புத்தகாலயங்கள்

பிரவேச வரி விதிக்கும் யோசனை

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, அக். 4

இம்மாகாணத்தில் ஜனங்களுக்கு பயன்படக் கூடிய புதத காலயங்கள் ஏற்படுததும் பிரேரணை ஒன்றை சென்னை சர்க்கார் அங்கீகரித்திருப்பதாக அறியபபடுகிறது. விரிவான கிராமடவுன் புததகாலய சர்வீஸ் ஒன்றும ஆரமபிக்கப்படும்.

இததிடடம் புத்தகாலய டைரக்டர் ஒருவரின் நிர்வாகததிலிருக்கும மதய புத்தகாலயம்" சென்னையில் ஸதாபிக்கபபடும அது சென்னை கார்ப்பரேஷனின நிர்வாகததிலிருந்து வரும்.

ஜில்லாககளில் ஊதல புத்தகாலயங்கள முனிசிபாலிடிகளின நிர்வாகததிலிருக்கும முனிசிபல் சார்பில்லாத பரதேசங்களிலுள்ள புததகாலயங்கள ஜில்லா போடுகளின் நிர்வாகததலிருகும.

இந்த புததகாலயங்களை நிர்வகிக்கும ஸதாபனங்கள் அந்தந்த பிரதேசங்களல் புததகாலயவரி விதிக்க அனுமதிக்கப்படும்.

பாகிஸ்தானின் காங்கிரஸ் தலைவர்கள்

இந்திய சர்க்காருக்கு வேண்டுகோள

புதுடில்லி, அக் 4

பாக்கிஸ்தானைச் சேர்ந்த முஸலிமலலாதாரை வெளியேற்றவும அவர்களுக்கு வாழுமவசதி செயதுகொடுककவும இந்திய சர்ககார் பின்வரும் காரியங்களை உடனே செய்யவேண்டுமெனக் கோரி மேற்கு பாகிஸதான் காங்கரஸ தலைவர்கள ஒரு அறிககை வடுத்துளளனர்

1 பலுசிஸதான் உட்பட மேற்கு பாகிஸதான் முழுவதிலும உள்ள ஹிந்து, சீகியரை உடனே பததிரமாக வெளியேற்றுவதை மிக முகயமான காரியமாகக கருதவேண்டும. யுததகாலத்தில் சர்ககார்கள செயவதுபோல இந்திய சாககார் தம் சாதனங்கள அனைததையும இக் காரியத்துக்காக ஒனறு திரடடவேண்டும,

2. வெளியேறுவோர் தங்கள உடமைகள அனைததையும எடுத்துவர வசதிசெய்யவேண்டும்.

3. சோரம் செய்யபபட்ட மாதரையும் மதம் மாற்றபபட்ட மாதரையும் மீடக சகல யத்தனங்களையும் செய்யவேண்டும. மாதரை மானபங்கம செய்வதை எந்த சர்க்காரும் சகித்துருக்கக்கூடாது.

4 வெளியேறுவோர் (அகதிகள) முகாமகளில உள்ளாருக்கு உணவு, வைததிய நிவாரணம் முதலியவைகளைப் போதுமானபடி அளிககவேண்டும்.

5 அகதிகள் விடடுவந்துள்ள ஸதாவர ஜங்கம சொததுகளுக்குப் போதுமான நஷ்டஈடு கொடுப்பதாக பாகிஸதான சாக்காரோ அது தவறினால் இந்திய சர்க்காரோ உததரவாதம அளிக்கவேண்டும

அகதிகளின் உடமைகளைப் பாக்கிஸதான் சர்ககார் அற்பதொகைக்கு விற்றும் ஆர்ஜிதம் செய்தும் வரும வழக்கததால் அகதிகள் ஆதரமடைந்துள்ளனர். முஸலிம் அகதிகளின் உடமைகளைப் பாதுகாக்கடிலியில் செய்யபபட்டுள்ள ஜனநாயக ரீதியான ஏறபாடுடன் இதை ஒப்பிடடுப பாருங்கள். மேறகூறிய காரியததை பாக்கிஸதான் சர்க்கார் செய்யாதிருக்குமபடி இந்திய சர்ககார் தம் முழு பலத்தையும் பிரயோகித்து அகதிகள் பேதுமான நஷட ஈடுபெற வழி செய்யவேண்டும்.

6. அகதிகள் வெளியேற்றபமடிந்ததும அவர்களை குடியேற்றி வாழச்செயவதை இந்திய சர்க்காரும மாகாண சர்ককாரகளும் முதற் கடமையாக மேற்கொள்ளவேண்டும். இதற்கான பிரம்மாண்டமான திட்டங்களை அகதிகளின் பிரதிநிதிகளைக் கலந்தே வகுக்கபபடுமென நமபுகிறோம்.

முஸ்லிம் அகதி ரயிலில், காந்திஜி செல்வார்

பாக்கிஸ்தானுக்கு மவுண்ட்பேட்டனும் பின்பறறலாம்

இந்தியாவின் நல்லெண்ணத்தை நிரூபிக்க உறுதி

லண்டன், அக். 1

மகாத்மா காந்தி வகுப்புக் கலகங்களை அடக்க முழு முயற்சி செய்வார் என்று லண்டனுக்கு விமானத்தல் வருபவர்கள் கூறுகிறார்கள். ஹிந்துக்களின் நலலெண்ணத்தை நிரூபிப்பதற்கு அறிகுறியாக பாக்கிஸ்தானுக்குச் செலலும் முஸ்லிம அகதிகள் ரயிலில, காந்திஜி தல்ல உத்தேசதததிருப்பதாகத் தெரிகிறது. லார்டு மவுண்ட்பேட்டனும் லண்டன் போகுமுன் ஒரு முஸ்லிம அகதி ரயிலில் ஏறி பாக்கிஸ்தானுக்குச் செல்வார் என்று எதிபாரக்கபபடுகிறது

கட்டிட வேலைக்கு
வேண்டிய எல்லா
விதமான சாமான்களும்
குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்
செட்டிநாட்
கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றினும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும் நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திர முறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கிய வியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சச்சு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!
குறைந்த கட்டணம்! நிறைந்த பரிசு!!

கலை அறிவுப் போட்டி நிர்-1

ரொக்கப் பரிசு ரூபா. 1200.

1-ம் பரிசு ரூபா 500-00 1-ம் போனஸ் பரிசு ரூபா. 75-00
2-ம் " " 300-00 2-ம் " " " 50-00
3-ம் " " 150-00 3-ம் " " " 25-00

அனுதாபப் பரிசு ரூபா: 100

முடிவு திகதி 10-11-47.

விடையும் பரிசுபெறறோர் விபரமும் 15-11-47 சுதந்திரனில் வெளிவரும்
பிரவேசக்கட்டணம் முதல கூப்பனுக்கு சதம் 50. (அணு 8.)
5 கூப்பன்களுக்கு ரூபா 2-50. அதன்மேல் ஒவ்வொரு
கூப்பனுக்கும் சதம் 25. (அணு 4.)

1	வி	ஷ்	ணு
2	அ		பு
3		ங்	கை
4		ஸ	ம்
5	கு		வு
6		ந்	தி
7		ங்	தி
8	பூ		ம்
9	ப	ய	
10	வ	ஸ	

குறிப்புகள்

1. சாக்கும் தெய்வம் இதுவே
2 ஈரப காட்டும இது
3 பெண்தான்
4 வேளாண்மையின் பயன் இதிலும் தங்கியிருக்கிறது
5 பிறர் அறிய இது நிகழாது
6. ஒரு பிராணி
7. இதைச் சொல்லி இடம் காட்டலாம்
8 ஒரு நட்சதத்ரம்
9 பிரயோசனம்
10 வெறறி

இதன் விடை யாழ்ப்பாணம் எகஸ்சேஞ் வங்கியில் டிப்பாஸிட செய்யபபடடிருகிறது.
விடைகளைத் தனிக் காகிதத்திலும எழுதியனுப்பலாம்.
நிபந்தனைகளுக்கும் இலவசக் கூப்பன்களுக்கும உடனே எழுதுக.

குறிப்பு:- எங்கள் போட்டிக் கூப்பன்களை விநியோகிப்பதற்கு இலங்கை முழுவதும் ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷனுண்டு.

கலை அறிவுப்போட்டி நிலையம்
கம்பளை ரோட், பாடுக்கித்துறை, (சிலோன்)

மேனாட்டாரின் மீது ஸ்காட் பாதிரியார் குற்றச்சாட்டு

காந்திஜிக்கு லண்டன் டைம்ஸ் புகழ்மாலை

(தொடர்ச்சி)

பரிட்டிஷார் வெட்கித் தலை குனியவேண்டும்

"காந்திஜி வழிக்கையும், யேசுநாதர் வழிக்கையும் அனுகமாக ஒன்றாகவிருகிறது அவர் வழிப்படச் செனறால பாவர மகளும், தம் சகதியை காட்டலாம் இதுமாதிரி வேறெந்தக் சியும் வழிகாட்டவில்லை. ஆகவே அவரை பகதாம் பசலி என்று சொலலுவது தகு" என்று ஏழுதுளளவழும கிழக்கு லண்டனில் தொண்டில் ஈடுபடடிருகுகும மிகேல ஸகாட என்னும பாதிரியார் இன்று காந்திஜியைப் பறறி குறிப்பிடுகையில சொன்னார்.

"இன்று இந்தியாவில் நடைபெறும் கோரங்கள் கண்டு, ஒவ்வொரு இஙகிலீஷகாரனும வெட்கப்படவேண்டும். 150 வருஷங்கள அங்கு தனி அரசு செலுததினும். அப்படியிருந்தும அமைதியாக அதிகாரத்தை நமமால் மாற்ற முடிந்ததா?

கோரங்களைக் கண்டு கொம்மாளமா?

"சில பத்திரிகைகளும், ராஜீயத்தலைவர்களும் இனறு இந்தியாவில் நடைபெறுவதைக் கண்டு குஷிப்படுகிறார்கள் அதற்கு வழிகண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பும் நமக்கிருகிறது.

வெள்ளையரல்லாத மக்களைச் சுயபாட்சிக்குக் கொண்டு விட வேண்டும். அதைச் செய்யாவிட்டால், மேலை நாடுகள் கதி அதோகதிதான்' என்றார்.

அமெரிக்காவால் தாமதம்

தென் மேற்கு ஆப்பிரிக்கர்களின் கட்சியை ஐ. நா. அங்கத்தினர்களுக்கு எடுத்துச் சொல்ல அமெரிக்கா போகஸ்காட் வந்திருக்கிறார் இதுவரையில் அதனிடமிருந்து பிரயாண அனுமதிச் சீட்டு வரவில்லை சென்ற 6 மாத காலமாக ஆபிரிக்காவில் 6000 மைல் பிரயாணம் செய்து ஆப்பிரிக்கர்களின அபிப்பிராயததை அறிந்துகொண்டிருக்கிறார். சில காலம் அவர் கல்கத்தாவிலும், பம்பாயிலும் கூட இருந்திருக்கிறார்.

257 வருஷ உறவு முடிந்தது

கல்கத்தா கோட்டையிலிருந்து பிரிட்டிஷ் படைகள் வாபஸ்

கல்கத்தா, அக் 4

கல்கத்தாவிலுள்ள "போர்ட்வில்லியம்" என்ற கோட்டை போடு 250 வருஷ காலமாக பிரிட்டிஷ் துருப்புகளுக்கு இருந்து வந்த தொடர்புஇனறுமுடிவடைந்தது இங்கிருந்த கடைசி பிரிட்டிஷ் படையாகிய 2-வது லங்காஷயர் ரெஜிமெண்ட ஒன்று கோட்டையை விட்டு வெளியேறியது. இதற்கு பதிலாக இனி கலகத்தா கோட்டையில் ஒரு கூர்க்க பட்டாளம் இருகும் 1826-ல் மத்திய இந்தியாவின் பெளரிப்பூரை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றிய பொழுது இந்தக் கோட்டைககும் பிரிட்டிஷ் படைகளுக்குமிடையில் தொடர்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த படிப்பைத் தேசப் பணியில் செலவிடுக

கல்கத்தா சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் ராஜாஜி போதனை

வங்க ராஜாங்கம் இரண்டு பட்டாலும் கலாசாரம் ஒன்றேயாகும்

கல்கத்தா, அக். 3

இன்று நடந்த கல்கத்தா சர்வகலாசாலை பட்டமளிப்புவிழாவில் பங்கேற்ற கவிஞ்ஞான ஸ்தாபன சர். ஞான சங்கிர கோஷ் பேசுகையில் ஐக்கிய வங்க கல்வி, கலாசார, விஞ்ஞான ஸ்தாபனம் அமைக்க வேண்டுமென்றார்.

"மகாத்மாவின் மகிமையாலேயே இன்று கீழ் வகுப்காளிகள் சமாதானமாக பிரிந்து சென்றனர் அவர்களையும் அணைத்துக்கொள்ளும்வகையில் இந்த ஐக்கிய வங்க ஸ்தாபனம் பாடுபடவேண்டும். வித்தியாசங்களைச் சவுஜன்னியமாக தீர்த்துக் கொள்ளப் போதிக்கவேண்டும் கனடா, அமெரிக்கா எல்லோலவே, வங்கப் பிரிவினை எல்லை ஒருக்கும் இல்லாதது போலவே இருக்கவேண்டும். சுதந்திரத்தை அனுபவிக்க ஆரம்பித்ததும், நம் பிரச்னைகளைத் தீர்க்க இந்தியாவின் பலபாகங்களும் பரஸ்பர ஆதரவுடனிருக்கவேண்டியது தானாகவே பலனாகும்.

தொழில் கல்வியே பிரதானம்

கல்கத்தாவில் பெரும் தொழிற் கல்வி ஸ்தாபனம் வேண்டும். நகருக்கு அருகாமையிலேயே பெரிய விஞ்ஞான கல்லூரி அமைத்து அதில் மாணவர்கள் தங்கவும், பெரிய பெரிய ஆராய்ச்சிகளை நடத்தவும்சௌகரியமிருக்கவேண்டும் அதற்கு எல்லைக்கு அப்பாலிருப்பவரும் வரலாம். மெட்ரிகுலேஷன் முடிந்ததும், வங்காளிகள் பெரிதும் தொழிற் கல்லூரிக்கே போகவேண்டும். தலைவர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி நவ இந்தியா சிருஷ்டிக்கச் செய்யலாம்" என்றார்.

ராஜாஜியின் உபமானம்

விழாவின்போது பலத்த மழை பெய்து பலமீது ஜலம் கொட்டிக்கொண்டிருந்தும் அவர்கள் அதைப் பாராட்டாது சொற்பொழிவைக் கேட்டுவந்ததைக் கவர்னர் ராஜாஜி குறிப்பிட்டுவிட்டு அதைப்போன்ற பொறுமையும், கொஞ்சம் கவ்டமும் படத் தயாராகுல், அவர்கள் எவ்வளவோ சாதிக்கலாமென்றார்.

"இன்று பலர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். நீங்களே டாக்டர் கோஷ் சொன்ன ஐக்கிய வங்க கலைக் கல்வி விஞ்ஞான ஸ்தாபன அமைப்புக்கு முற்படுங்கள். பயத்தையும், சந்தேகத்தையும் விரட்டியடித்து; வங்கத்தின் ஐக்கிய நாகரிகத்துக்குப் பாடுபடுவதுடன் தைரியம் நல்லெண்ணம், சகிப்புத் தன்மையில் முனையவேணடும். சர்க்கார்கள் இரண்டானாலும், கலாசாரம் இரண்டாகவல்லை; ஆகவும் முடியாது" என்றார்

தாய் மொழியிலேயே போதனை

போதனா பாஷை தாய்மொழியிலே இருக்கவேண்டுமென்றும், சர்வகலாசாலைப் பட்டதாரிகளைத் தயாரிக்கும் யந்திரமல்லவென்றும் கூறிவிட்டு "நம் தேசத்துக்குப் பையன்களும், பெண்களும் தொண்டாற்றவேண்டுமானால் போதனா முறையையே அடிபோடு மாற்றியாக வேண்டும். இனி அடிமைக் கல்வி இல்லை. இனி சுதந்திரப் பிரஜைகளின் கல்வியே. ஆகவே வெறும் உத்தியோக வேட்டைக்கான படிப்பாக இல்லாமல், தேசம் பயன்பெறும்வகையில் பெற்ற கல்வியைப் பயன்படுத்தவேண்டும்" என்றார்.

இன்று பட்டம் பெற்ற 2300 பேர்களில் 11 பெண்கள் பதக்கம் பெற்றவர்கள்.

இந்திய கவர்னர் ஒருவர் தலைமை வகிப்பது கல்கத்தா சர்வகலாசாலையில் இதுவே முதல் தடவையாகும். கவர்னர் ராஜாஜி பெருமழையால் குடையி[illegible] நீதிநந்து பேசவேண்டிய [illegible]

பிரிட்டிஷ் மந்திரி சபை பலப்படுத்தப்படுகிறது

ஜப்பான், பர்மா, இந்தியா, பாலஸ்தீன் பிரிட்டிஷ் படைகள் வெளியேற்றம்

சர்ச்சில்கோஷ்டியார்கொக்கரிப்பு

லண்டன், அக். 5

பிரிட்டிஷ் மந்திரி சபை திருத்தியமைக்கப்படும் சில பழைய மந்திரிகள் விலகுவார்கள். புதிய மந்திரிகள் சேர்க்கப்படுவார்கள் திங்கள், செவ்வாய்க்கிழமை இது சம்பந்தமான முடிவுகள் தெரியும். ஆலோசனைகள் ரகசியமாக நடைபெறுகின்றன. ஷின்வெல், அல்பர்ட் அலெக்சாண்டர், 78 வயதுள்ள லாடு அடிசன், ஜான்வில்மட், அல்பிரட பார்னஸ, லார்டு இன்மன், ஜோசப் வெடவுட் முதலியவர்கள் விலக்கப்படுவார்கள் என்று தெரிகிறது இளமையும் திறமையுமுள்ள உதவி மந்திரிகளாகவுள்ள சிலர் புதிய மந்திரிகளாக நியமிக்கப்படுவார்கள். முக்கியமாக செயிட்ஸ்கல, டர்பின் ஆகிய இருவர் புதிய மந்திரிகளாகக்கூடும்.

ராணுவத்தில் சிக்கனம்

இந்தியா, பர்மா, பாலஸ்தீனத்திலுள்ள பிரிட்டிஷ் ராணுவங்களைக் காலி செய்வதும் சம்பந்தமாக பிரிட்டிஷ்மந்திரிசபையில் துரிதமான ஆலோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன ராணுவத்திலிருந்து விலக்கப்படும் ஆட்களை கைத்தொழில்களில் ஈடுபடுத்தி பொருளாதார மீட்சியுற முழுமுயற்சியான ஆலோசனைகள் நடைபெறுகின்றன.

ஜப்பானில்எஞ்சியுள்ள பிரிட்டிஷ் துருப்புகளை திருப்பியழைத்துவிட முடிவு செய்துவிட்டதாக பிரிட்டிஷ் சர்க்கார் ஆஸ்திரேலியாவுக்கு அறிவித்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் ராஜினாமா செய்வாரா?

பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் மாண்ட்கோமரி ராஜினாமா செய்யப் போவதாக வெளிவரும் பத்திரிகைச் செய்தியை பிரிட்டிஷ் யுத்தக் காரியாலயத்தார் மறுத்திருக்கிறார்கள்.

ஆஸ்திரேலிய ராணுவ விமானிகள் ராஜினாமா

அடலேயிட், அக். 4

120 லட்சம் பவுண் செலவில் ராக்கட் வெடிகுண்டு தளத்தில் நடைபெறும் வேலையில் ஈடுபட்டுள்ள ஆஸ்திரேலிய ராணுவ விமானிகள் ராஜினாமா செய்வதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் பொதுப் பணத்தை வீண் செலவு செய்து இங்கு நடைபெறும் வேலையில் அதிருப்தி கொண்டுள்ளார்கள். ஆனால் விமானப் படைத் தலைவர் அவர்கள் குறைபாடுகளைக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார் இந்த ராக்கட் வெடிகுண்டு ஆராய்ச்சித் தளம் ஆசியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்புக்காக நிறுவப்பட்டுள்ளது.

கன்சர்வேட்டிவ்கள் கொக்கரிப்பு

பிறைட்டன், அக். 4

பிரிட்டனில் புரட்சிகரமானதும் ஜனநாயகத்தை ஒழிப்பதுமான களர்ச்சி இருந்து வருவதால் சமியூனிஸத்தையும் பாசிஸத்தையும் ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தீர்மானம் இங்கு நடைபெற்ற கன்சர்வேடிவ்கள் மகாநாட்டில் நிறைவேறியது.

பிரதிநிதிகள் பிரிட்டிஷ் கமியூனிஸ்டுகளைத் தாக்கிப் பேசினார்கள் தொழிற் சங்கங்களில் கமியூனிஸம் பரவியிருப்பதாக ஒருவர் தெரிவித்தார்.

கமியூனிஸ்ட் பற்றுள்ள ஒரு சிறு கூட்டத்தின் கிளர்ச்சிக்காக இந்தியாவுக்கு பிரிட்டன் தனது அதிகாரத்தை மாற்றிக் கொடுத்தது பிசகு என்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிலைமையை இழந்து விட்டோமென்றும் இளவயதுள்ள ஒரு பிரதிநிதி நேற்றுப்பேசினார் சிலருக்கு இந்த மடைத்தனமான பேச்சு மனக்குழப்பத்தை உண்டு பண்ணியது.

சர்ச்சில் ஒப்பாரி

இன்று லண்டன் சர்ச்சில் பேசியபோது, பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கத்தைத் தாக்கினார். தொழிற் கட்சியார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உலை வைத்து விட்டார்கள் என்றும் இந்தியாவில் ரத்தக்களரி அவர்கள் சுதந்திரமளித்ததால் ஏற்பட்டதென்றும், பர்மாவையும் அந்தக் கதிக்கு உள்ளாக்கப் போகிறார்கள் என்றும், சென்ற வருடம் தான் சொன்ன ஜோஸியம் பலித்துவிட்டதென்றும், எகிப்துக்கும் இந்தியாவுக்கும் பிரிட்டன் கடன்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டது தப்பு என்றும், எகிப்தும் இந்தியாவும் பிரிட்டனுக்குத் தான் கடன் கொடுக்க வேண்டுமென்றும் புதிய தேர்தலுக்கு எல்லோரும் தயாராக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

வியட்நாமில் பிரஞ்சு ஆக்கிரமிப்பு

ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு முறையீடு

மாஸ்கோ, அக். 4

சென்ற டிசம்பர் மாத முதல் பிரஞ்சு ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போர் நடத்தும் வியட்நாம் (இந்தோ-சைனா) ஐக்கிய தேசங்களின் ஆதரவில் வியட்நாமுக்கும் பிரான்சுக்குமிடையே சமரசப் பேச்சு நடத்த வேண்டுமென்று கோரி ஐக்கிய தேச ஸ்தாபனக் காரியதரிசிக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. வியட்நாமிலிருந்து பிரஞ்சு துருப்புகள் வெளியேற வேண்டுமென்றும் வியட்நாம் குடியரசு சுதந்திரம் பாதுகாக்கப்படுமென்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாரிஸில் கைதியான வியட்நாம் சர்க்கார் பிரதிநிதி பாக்மாய் ராணுவ கோர்ட் விசாரணைக்கு பிரஞ்சு சோமாலிலந்து மார்க்கமாக சைகோனுக்குக் கொண்டுபோகப்படுகிறார். இந்தோ-சைனாவை ஜப்பான் ஆக்கிரமித்திருந்தபோது அங்குள்ள பிரஞ்சுக்காரர்களைக் கொல்ல அவா உத்தரவிட்டதாக அவர் மீது குற்றம் சாடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவும் அட்லாண்டிக் சாசனமும்

ரஷியா பரிகசிக்கிறது

லண்டன், அக் 4

"பிரவ்டா" பத்திரிகை எழுதுவதாவது:- யுத்த காலத்தில் அமெரிக்கர்கள் அட்லாண்டிக் சாசனத்தைப் பற்றி எல்லா நாடுகளுக்கும் சுதந்திரமும் உரிமைகளும் உண்டென்று அழகாகப் பேசினார்கள். யுத்தத்தில் வெற்றி கிடைத்தவுடன் இப்பொழுது எல்லா நாடுகளும் அமெரிக்காவின் தர்மகர்த்தா நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அநேக நாடுகளிலுள்ள மகக்ள் உதாரணமாக சைனா கொரியா, வியட்நாம் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் மக்கள் அமெரிக்காவின் அட்லாண்டிக் சாசன உரிமைகளை நம்பினார்கள். இப்பொழுது அவர்கள் ஏமாந்து போனார்கள். அவர்களுக்கு கிடைத்த பலன் தங்கள் சுதந்திரத்தைக் காக்க தங்கள் ரத்தத்தைச் சிந்திக் கொண்டிருப்பதுமேயாகும்.

(ராய்ட்டர்)

"ஸ்ரீ. அரவிந்தரின் உபதேசம்"

கொழும்பு அக் 6

இன்று மாலை ஆறு மணிவிளவில் கொழும்பு மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் ஸ்ரீ. டி வி பகுமார் ரேய் "ஸ்ரீ அரவிந்தரின் உபதேசம்" என்னும் பொருள் பற்றி ஒரு உபந்நியாசம் செய்வார்.

ஜப்பான் ஆக்கிரமிப்பால் 30 கோடி ரூபாய் நஷ்டம்

பிரிட்டன்—பர்மா நிதி ஒப்பந்தப் பேச்சு

ரங்கூன், அக். 4

பர்மா ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, பிரிட்டன் 1942ல் பர்மாவை விட்டு ஓடிப்போனபோது பர்மா சர்க்கார் வெளியிட்டிருந்த 30 கோடி ரூபாய்களையும் ஜப்பானியர்கள் கொள்ளையிட்டதாலும். மீண்டும் பிரிட்டன் பிரவேசித்தபோது பர்மா நாணயம் செல்லாது என்று பிரகடனம் செய்ததாலும் பர்மாவுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் இது சம்பந்தமாகவும் யுத்தத்தின் காரணமாகவும் பர்மா அடைந்துள்ள சேதத்திற்கு நஷ்ட ஈடு செய்வது பற்றி இங்கு நிதி ஒப்பந்தப் பேச்சு நடத்த வந்திருக்கும் பர்மா தூதுக்கோஷ்டி பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்க வேண்டுமென்றும் பர்மா மாஜி சட்டசபைத் தலைவர் ஊசிட் லெயிங் தெரிவித்தார் 1945ல் பிரிட்டன் மீண்டும் பர்மாவைக் கைப்பற்றியபோது 576 0 கோடி ஜப்பானிய ரூபாய்களைச் செல்லாததாக்கியதால் பர்மாவுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஜுனாகத் அருகே இந்திய துருப்புகள்

ராஜ்கோட், அக் 3

ராஜ்கோட்டிலிருந்து இந்திய டொமினியன் துருப்புகள் வேறு இடத்திற்குச் சென்றுள்ளன. ஜுனாகத்தை அடுத்துள்ள பாந்தவா, சர்தார்காட் என்றதாலூகாக்களுக்கு அவற்றின் அரசர்கள் வேண்டியதன் பேரில் அத்துருப்புகள் போயிருக்கக்கூடும். இவ்விரு தாலூகாக்களும் இந்தியாவுடனோ காக்கிஸ்தானுடனோ இன்னமும் சேரவில்லை என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் படைகள் குறைக்கப்படுகின்றன

சர்க்காரின் சிக்கனத் திட்டம்

லண்டன், அக் 5

டாலர் பஞ்சத்தைப் போக்குவதற்காக வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் படைகளைக்குறைக்க பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் மூவகைப் படைகளின் தலைவர்கள் இணங்கி விட்டார்கள். வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ்படைகளைப் பராமரிக்க வருடத்திற்கு 1230 லட்சம் பவுண் செலவாகிறதென்று சென்ற மே மாதத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி கணக்கிட்டார்.

வெளிநாடுகளிலுள்ள 4 லட்சம் பிரிட்டிஷ் துருப்புகளின் செலவு 20 சதவிகிதம் குறைக்கப்படும். இந்தியாவிலும் மத்திய கழக்கு நாடுகளிலுமுள்ள பிரிட்டிஷ் துருப்புகளைக் குறைப்பதால் செலவில் அதிக மிச்சமேற்படும். வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளின் எண்ணிக்கை பின வருமாறு:- பாலஸ்தீனம்-95,000; ஜெர்மனி ஆஸ்திரியா-130,000; இந்தியா-50,000; (கூடிய சீக்கிரம் இந்தியாவிலுள்ள துருப்புகளைக் காலி செய்வது தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆனால் கொஞ்சப் பேர் இதுவரை இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்) மத்திய கிழக்கு நாடுகள்-50 000; மலேயா-25,000; இதாலி-15,000; கிரீஸ-7,000 மற்ற இடங்களில் 25,000 மத்திய கிழக்கு நாடுகளில், முக்கியமாக பாலஸ்தீன பிரிட்டிஷ் துருப்புகளைக் காலிசெய்ய ஏற்பாடு நடைபெறும். சூயஸ் கால்வாயில் 1936 வது வருட ஆங்கிலோ-எகிப்திய ஒப்பந்தப்படி 10 000 துருப்புகளாகக் குறைக்கப்படும். பர்மா சுதந்திரமடைவதால் அங்குள்ள பிரிட்டிஷ் படைகளும் காலியாகும் மலேயாவில் பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் பதிலாக கூர்க்கா துருப்புகளை நிறுவ ஆலோசிக்கப்படுகிறது. ஜெர்மனியில் பிரிட்டிஷ் பிரதேசத்திலுள்ள முக்கிய இடங்களைத் தவிர மற்ற இடங்களிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளை குறைக்கலாமென்று சொல்லப்படுகிறது.

(ராய்ட்டர்)

அரசாங்க ஏஜண்டை ஏமாற்றிய கிராம விதானை

18 மாதக் கடுழியச் சிறை

அனுராதபுரி, அக் 5

வடமத்திய மாகாண அரசாங்க ஏஜண்டரை, ரூபா 4215 க்கு மோசடி செய்த குற்றத்திற்காகவும், கள்ளக் கையொப்பம் வைத்த குற்றத்திற்காகவும், அனுராதபுரி டிஸ்திரிக் நீதிபதி, ஆங்குள்ள ஒரு கிராம விதானைக்கு 18 மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் சாட்சியங் கூறியவர்களில ஒருவர் இலங்கையின் போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. றிச்சாட் அலுவிகார ஆவர். அவர் இக்குற்றத்தைக் கிராமவிதானை செய்த காலத்தில் ஆங்கு ஏஜண்டாக விருந்தவராவர்.

இரமோசடி 843 ஏக்கர் நிலத்திற்கு, உரம் வாங்குவது சம்பந்தமாகக் கிராம விதானையால் மோசடியாக கோரப்பட்ட ரூபா 4215 காரணமாக வேயாகும்.

நவ இந்தியாவைப் பற்றி சோவியத் ரஷியா கருத்து

(1-ம் பக்கத் தொடர்)

ஆசியாவுக்கு ஒரு மார்ஷல் திட்டம்

பிலிப்பைன் பிரதிநிதி குவார்டனோ பின்வருமாறு தெரிவித்தார்:-

ஐரோப்பிய பொருளாதார மீட்சிக்கு மார்ஷல் திட்டம் ஏற்பட்டிருப்பதுபோல ஆசியாவின் பொருளாதார மீட்சிக்கும் ஒரு மார்ஷல் திட்டம் வேண்டும். உலகப் பொருளாதார மீட்சியின் பொருட்டே ஆசியாவுக்கும் மார்ஷல் திட்டம் ஏற்படவேண்டியதவசியமாகும். கைத்தொழில் உலகில் முன்னேறாத நாடுகள் மீது அக்கறை செலுத்த வேண்டுமென்று இந்தியப் பிரதிநிதி கூறியதை ஆதரிக்கிறேன். உலகம் முழுவதும் ஒன்று போல முன்னேற்றமடைந்தால் தான் ஒழுங்கான பொருளாதார நிலைமையை உண்டுபண்ண முடியும்

(ராய்ட்டர்)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு கமிஷன்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு பொருளாதாரக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று எகிப்திய பிரதிநிதி தெரிவித்தார். இந்தக் கமிஷன் அராபிய லீக் பொருளாதாரக் கமிஷனுடன் ஒத்துழைக்குமென்று தெரிவித்தார். (ராய்ட்டர்)

நிறத்துவேஷம் கண்டனம்

சிக்காகோ, அக். 4

எப்பொழுதும் ஒதுங்கி நிற்கும் கொள்கையுடைய 'சிக்காகோ ட்ரிபியூன்' பத்திரிகை தலையங்கத்தில் பின்வருமாறு எழுதுகிறது:-

ஆபிரிக்காவிலுள்ள வெள்ளையரல்லாத வகுப்பினர் சம்பந்தமாக பிரிட்டனும் தென்னாப்பிரிக்காவும் அனுஷ்டித்து வரும் வர்க்கத்துவேஷக் கொள்கை ஹிட்லர் அனுஷ்டித்ததுவேஷக் கொள்கையைவிட மிஞ்சியதாக இருக்கிறது. இதில் ஐக்கிய தேச ஸ்தாபனம் தலையிடாது போலிருக்கிறது. உலகில் வெள்ளையரல்லாத வகுப்பினர் மீது ஐரோப்பியர் ஆதிக்கம் செலுத்துவதற்கே ஐக்கிய தேச ஸ்தாபனம் ஒரு கருவியாக உபயோகிக்கப்படுமென்று தெரிகிறது. இந்த உண்மையை அறிந்ததான் தென்னாப்பிரிக்கா ஐக்கிய தேச ஸ்தாபன தீர்மானத்தை மீறி நடக்கிறது.

சுதேசிகள் விஷயத்தில் தென்னாப்பிரிக்கா சர்க்கார் நடந்து கொள்வதில் ஐக்கிய தேச ஸ்தாபனம் தலையிடாது தடுப்பதற்கு பிரான்ஸ், பெல்ஜியம், போர்ச்சுகல், பிரிட்டன் ஆகிய நாடுகள் காட்டிய மனப்பான்மை இதற்குச் சான்றாகும்.

வெள்ளையர்தான் ஆளப்பிறந்தோர் என்ற திமிர் வெறி கொள்வதில ஜெனரல் ஸ்மட்ஸ் அடோல்ப் ஹிட்லரைத் தூக்கியடித்து வருகிறார். முதலாவது யுத்த முடிவில் பிரஸிடென்ட் வில்சனின் 14 அம்ச உபதேசம் எவ்வளவு எவரது செவியிலும் ஏறாது போயிற்றோ அதே போன்றுதான் ஐக்கிய தேச ஸ்தாபனத் தீர்மானங்களின் கதியும் ஆகின்றன.

சத்யாக்ரகமா? துராக்ரகமா?

மக்களின் இன்றைய போக்குபற்றி காந்திஜி

புதுடில்லி, அக் 3

காந்திஜியின் பிரார்த்தனைப் பிரசங்கத்தின் அதிகார பூர்வமான விஷயம் வருமாறு:-

எனக்குப் பாராட்டுச் செய்திகள் ஏராளமாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக்குப் பதில் தெரிவிக்க நான் சக்தியற்றவனாக இருக்கிறேன். இவைகளில் சிலவற்றைப் பிரசுரிக்க வேண்டுமென நண்பர்கள் கூறினார்கள். முஸ்லிம் நண்பர்களிடமிருந்து கூட எனக்கு பல அழகிய செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் தற்பொழுது அவைகள் பொதுஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய அவ்வளவு அவசியமானவை என்று நான் கருதவில்லை. ஏனெனில் பொதுஜனங்களுக்கு அஹிம்சையிலும் உண்மையிலும் தான் நம்பிக்கையில்லையே தப்பு செய்கிறவர்கள் யாராக இருந்த போதிலும் குற்றவாளிகள்தான்.

இன்று பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமஸ்தான சத்யாக்ரஹங்களைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

உண்மையில் இவைகள் துராக்ரஹமல்லவா என்று நான் அடிக்கடி வியப்படைவதுண்டு மில்களிலோ, ரயில்வேக்களிலோ, எடிரைக் செய்யப்படுவது அல்லது சமஸ்தானங்களில் நடைபெறும் இயக்கங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்னையாகவே இருக்கின்றன.

இன்று சமூகத்தில் ஒரு கொடிய விஷம பரவி வருகிறது. தங்களுடைய லட்சியத்தினால் தங்களுக்கு என்ன பலன் கிடைக்குமென்று தெரியாமலே அதில் இறங்குகின்றனர்.

இப்படிப்பட்ட இயக்கங்களுக்கு ஆசிச் செய்திகள் அனுப்பும்படி எனக்குக் கடிதங்கள் வருகின்றன நல்ல காரியங்கள் எதுவாக இருந்தாலும் அதற்கு யாருடைய ஒத்தாசையும் வேண்டியதில்லை. உண்மைக்கு எம்பொழுதும் அழிவே கிடையாது. சத்தியாக்ரகத்தில் இறங்குகிறவர்கள் தாங்கள் நாடு ஸ்ரீ சஹ்ரவர்தி, பொப்பிலி வது உண்மைதானா என்பதை ராஜா முதலியவர்கள் அவரை நன்கு ஆலோசித்துப் பார்க்க தரிசித்தனர்.

நுவரெலியாவுக்குத் தண்ணீர் வசதி

புதிய முறைத் திட்டம்

நுவரெலியா, அக். 5

நுவரெலியாவிற்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் முறை ஒன்றை பகிரங்க வேலை இலாகா (தண்ணீர் வசதி வேலைகள் செய்யும்) பகுதிப் பிரசம என்ஜினீயர் திரு. ஈ. பொன்சேகா தயாரித்திருப்பதாக அறியப்படுகிறது.

இதத்திட்டத்தின்படி பல அணைகள் நுவரெலியாவில் கட்டப்பட்டால் தண்ணீரைத் தேக்சங்களில் சொற்ப பணச் செலவுடன் சேமித்து வைத்திருக்க முடியும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

சமயமும் கடவுள் வழிபாடும்

மட்டக்களப்பு, செப் 30

மட்டக்களப்பைச் சேர்ந்த அக்கரைப்பற்று ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் செப்டம்பர் 29-ம் தேதி திங்கட்கிழமை மாலையில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடந்தது ஸ்ரீ கணேசாநந்த சபையார் தலைவர் எஸ். சிவஞானம் அவர்களையும் பண்டிதர் தா. முருகேசபிள்ளை அவர்களையும் மலர்மாலையிட்டு வரவேற்று சமரச மனப்பாங்குடன் ஒன்றரை மணி நேரம் பண்டிதர்கள் பேசிச் சபையை மகிழ்வித்தார்கள் இறைவனையடைய அன்பு ஒன்றே வழி என்ற உண்மையை வலியுறுத்திப் பேசினார்கள் திரு. க. நடராஜன் குறிப்புரை கூறினார். கணேசாநந்த சபைத் தலைவர் நன்றி கூறினார்

வேண்டும். இல்லாவிடில் எல்லாம் வெறும் கேலிக் கூத்தாக முடிந்து விடும்.

காந்திஜி இன்று ஓய்வெடுத்துக் கொண்டார்

டில்லி, அக் 3

மகாத்மா காந்தி டில்லிக்கு வந்த பின்னர் இன்றுதான் அவருக்கு ஓய்வு கிடைத்தது. சிலரே அவரை தரிசிக்க வந்தனர். பிரதமர் நேரு, படேல், ஸ்ரீ சஹ்ரவர்தி, பொப்பிலி

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி ஞாயிற மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ் படம

வெற்றிகரமான 3-வது வாரம்!

அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரூஸ் மெயில் புகழ் புதிய நடிகை
பாட்லிங்மணி சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும மெட்னியில் பால்கனிக்கு அரைசார்ஜ் எடுக்கப்படும்.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நோட்டீஸ் செய்து கொடுக்கப்படும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை,

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 6-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டார்த் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் டராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org